Registered No. M. 378.

23

सत्यात् नास्ति परो धर्मः

# பூர்ணசந்திரோதயம்.

## A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization

தொகுதி 6 } 1915 ௵ ஜூன் ௴ ராக்ஷஸ ௵ ஆனி ௴ { பகுதி 2,

அ. ரங்கசாமி ஐயர், B.A.B.L.,F.T.S, பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ. 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right Reserved.

## பொருளடக்கம்.

## CONTENTS.


பக்கம்.

1. தற்கால நிலைமை—அ. ரங்கசாமி ஐயர். B.A.,B L,F.T.S. 41
From the Editor-A. Rangasamy Iyer.B.A.,BL.,F.T.S.

2. ஹிந்துக்களின் தத்வ சாஸ்திரம். — ஆர். எஸ். நாராயணசாமி ஐயர். 51
Philosophy of the Hindus—R. S. Narayanasamy Iyer


---


## Ready for Sale.

*The English Translations of:—*

| | |
|---|---|
| **Thirty Minor upanishads** | **Rs. 3-8-0** |
| **Laghu Yoga Vasishta** | **Rs. 2-0-0** |
| **Professor Bergson & the Hindu Vedanta** | **Rs. 0-4-0** |

**without postage.**

The above Upanishads; except one or two have never before been published in a book-form. Please apply to:—

**K. Narayanasamy Iyer Esq,**
Theosophical Society, Adyar Madras.

பொருளுடை யாய்நீ யென்றுவந் தனனாற்
புரிந்திடாய் மருகுரு மணியே. (௰௧)

பாலனுக் காகப் பாற்கட லீந்த
பண்பையும் பக்தனைப் புரக்கக்
காலனைக் காய்ந்த கருணையு மாதர்
கருப்பையுட் கட்டுண்டு கிடந்த
பாலனை யூட்டி யீர்த்தவல் லபமும்
பகர்ந்தசொற் சுவையெலா மறந்த
பாலனைத் தேற்றி யாளவல் லாயோ
மாசிலா மருகுரு மணியே. (௰௨)

மாதவப் பேற்றை யடைந்தநின் றொண்டர்
மார்க்கத்தை யடைந்துயா தந்தோ
பாதகச் செயற்கே யுறைவிட மான
பாவைய ராதிமோ கத்திற்
சாதகத் தொழில்செய் சழக்கரைக் கூடித்
தளர்ந்தவத் தருணத்தில் வந்து
போதனை புகட்டிப் புனிதனு வமைத்த
புண்ணியா மருகுரு மணியே. (௰௩)

புண்ணிய பாவ மின்னதென் றுணராப்
புல்லரைப் போல்பல பிறப்பிற்
பண்ணிய பாவங்க ளெண்ணரி ததனைப்
பரிகரித் தாந்தவ முயற்சி
யெண்ணியான் றுணிபின் மனமிணங் காம
லிடர்ப்படும் பொழுதிவ னுற்றுக்
கண்ணினு திகளாற் றீக்கைகற் பித்த
கருணையே மருகுரு மணியே. (௰௪)

கற்பனை தந்தா யன்னையாம் பரம
காரண குருவடி வாகப்

பொற்புற வமைந்த புண்ணியப் பேற்றைப்
புகழ்வனோ வெவ்வொரு காலஞ்
சற்குரு மணியாத் தோன்றியாட் கொண்ட
தன்மையைப் புகழ்வனோ வின்னாள்
சற்ஜன ருறவைத் தந்ததைப் புகழத்
தக்கனோ மருகுரு மணியே. (டு)

தக்கநா லுணர்தற் கேற்றபுத் திகளோ
சாலவு மிலையிந்தக் காய
மிக்கணத் திருந்த தினிவருங் கணத்தி
லிருக்குமோ மரிக்குமோ வறியேன்
பொக்கமே தொழிலா யுளவெனைப் புரந்து
பூரண வாழ்வையு மளிப்பாய்
சக்கரன் முதலோ ரேற்றுமங் களவென்
சாமியே மருகுரு மணியே.

முற்றும்.

ஓம் தத் ஸத்

M. வேதநாயகஸ்வாமிகள்,
தக்ஷிணாமூர்த்தி ஆச்சிரமம்,
சிந்து பூந்துறை.

---

## நன்மொழி.

---

சற்குணம் வாய்மை தயாவிவேகந் தன்மை
சற்குரு பாதமே சாயைபோ னீங்காமே
சிற்பர ஞானந் தெளியத் தெளிவோர்த
லற்புத மேதோன்ற லாகுஞ் சற்சிட்டனே.

# ஆசை ஒழிமின்.

நாம் அநுஷ்டிக்கவேண்டிய ஒழுக்கநெறிகளை எப்படி நம்முடைய நாட்டில் மஹரிஷிகள் வரையறைசெய்து ஸம்ஸ்கிருத பாஷையில் தர்மசூத்திரங்களாக ஏற்படுத்திவைத்திருக்கிறார்களோ, அப்படியே தேசாந்தரங்களிலும்காலாந்தரங்களிலுமிருந்த அநேக ஸித்தபுருஷர்கள் வேறுபாஷைகளிலும் அவ்விதமான நூல்களை இயற்றி வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிராசீன கிரந்தங்களில் "Light on the path" என்பது ஒன்று. அது இந்தப் பத்திரிகையின் முன் பத்திராதிபராயிருந்து காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ ப. நாராயணஐயரவர்களால் "சன்மார்க்க தீபம்" என்னும் பெயருடன் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதில் பல அருமையான ஒழுக்கமுறைகள் சிறு சூத்திரங்கள் ரூபமாக வெளியிடப்பட்டிருக்கின்றன. அவைகளில் "ஆசை ஒழிமின்" என்னும் மேலேகண்ட வாக்கியமானது முதலாவது சூத்திரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசையாவது என்ன, அதை ஏன் ஒழிக்கவேண்டும், அதை ஒழிப்பதென்றால் எப்படி என்பதைப்பற்றிச் சுருக்கமாக விசாரிப்போம்.

ஒரு பிராணி, பொருள், பதவி முதலான ஏதாவது ஒரு ஸம்பத்தை நாம் அடையவேண்டும் என்று கொள்ளும் விருப்பத்துக்கு ஆசை என்று பெயர். அதுதான் லௌகிகமான விஷயங்களில் நம்மைப் பிரவிர்த்திக்கும்படி செய்கிறது. அப்படிப்பட்ட பிரவிர்த்தியினால் நாம் சுகதுக்கங்களை அநுபவிக்கவும், காரியம் இன்னது அகாரியம் இன்னது என்ற விவேகத்தை அடையவும் இடம் உண்டாகிறது.

அப்படியானால் ஆசையை ஏன் ஒழிக்கவேண்டுமென்றால், ஆசையால் தூண்டப்பட்டு ஸ்வயநயத்தைக்கருதிநாம்

விஷயங்களில் பிரவிர்த்திக்கிறேம். நம்முடைய ஆசை நிறைவேருமல் போனுல் நமக்குக் கோபம் உண்டாகிறது. நாம் ஆசைப்படும் பொருளை நம்மிலும் அதிகமாக உடைய வர்களைக் கண்டால் நமக்கும் பொருமை உண்டாகிறது. நம்மைக் காட்டிலும் குறைவாயுள்ளவர்களைக் கண்டு நமக்குக் கர்வமும் மதமும் உண்டாகிறது. நாம் ஆசைப்பட்ட பொருள் அழிந்துபோனுல் நமக்குத்துக்கம் உண்டாகிறது. நாம் ஆசைப்பட்ட பொருள் கிடைத்தாலும் அத்துடன் திருப்தி அடையாமல் இன்னும் வேண்டும் என்ற பேராசை உண்டாகிறது. இப்படிப் பலவாருகக் குரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் முதலானவைகளுக்கு ஆளாகி அவைகளால்விளையும்துன்பங்களில்அகப்பட்டுஅவதிப்படுகிறேம்அப்படிப்பட்டதுன்பங்களுக்குக்காரணம்நம்முடைய ஆசையேதவிர வேறில்லை. ஆகையால் எவ்விதமான துன்பங்களுக்கும் உள்ளாகாமல் நாம் நிரந்தரமான ஆனந்தத்தையே அடைய வேண்டுமானுல் ஆசையை ஒழித்தாலன்றி வேறு எந்த வழியாலும் ஸாத்தியமாகாது. இந்த உண்மையைத் தான் திருக்குறளில்

"இன்பம் இடையருு தீண்டும் அவாவென்றும்
துன்பத்துட் டுன்பங்கெடின்" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆசையை ஒழிப்பதென்ருல் எப்படி? எல்லாவிதமான பிரவிர்த்திகளையும் விட்டு அசேதன வஸ்துக்களைப் போல் ஒரு வேலையும் செய்யாமலிருப்பது என்று கருத்தல்ல. அப்படிக்கிருந்தால் வித்துக்குள் விருக்ஷம் போல நமக்குள் மறைந்திருக்கும் குணங்களும் சக்திகளும் விகாஸமடைவதும், மேன் மேலும் நாம் உயர் நலம் அமைந்து ஈசுவர ஸாயுஜ்யம் பெறுவதும் இயலாது. ஆகையால் ஆசையை ஒழி

ப்பதென்றால் ஸ்வயநயத்தை லக்ஷ்யமாகக் கொண்ட ஆசைகளை மட்டும் விட்டு உலக நன்மையை லக்ஷ்யமாகக் கொண்ட காரியங்களைச் செய்ய வேண்டும் என்பது கருத்து.

அந்தக் கருத்தையே மேற்கூறிய முதலாவது சூத்திரத்தின் விரியுரையாகக் கொள்ளத்தக்க நான்காவது சூத்திரத்தில் "But work as those work who are ambitious" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது "ஆனால் ஆசை பிடித்தவர்கள் ஸ்வயநயத்தைக் கருதி எவ்வளவு ஊக்கத்துடனும் உத்ஸாஹமாகவும் வேலைகளைச் செய்கிறார்களோ அவ்வளவு ஊக்கத்துடனும் உத்ஸாகமாகவும் வேலைகளைச் செய்யுங்கள்" என்பதாம்.

ஆசையால் அஹங்கையும் மமதையும் அற்று வைராக்கியத்தை அடைந்த விவேகிகளும் கூட நமக்கு ஆக வேண்டிய தொன்றுமில்லையென்று நினைத்து உதாஸீனர்களாயிருக்கலாகாது. தங்களைக் காட்டிலும் கீழ்ப்பட்டவர்களுக்கு உபகாரமாகத் தங்களுடைய உடைமைகளைத் தங்களால் இயன்ற மட்டும் உபயோகப்படுத்த வேண்டும்.

ஈசுவரன் ஒரு வெள்ளம் போலும், ஆசை ஒழித்தவர்கள் அந்த வெள்ளத்து நீரைத் தேவையான நிலங்களுக்குப்பாய்ச்சும் கால்வாய்கள் போலும். கால்வாயானதுமேலிருந்து வந்த ஜலத்தைத் தன்னிடம் நிறுத்திக் கொள்ளாமல் கீழே உள்ள நிலங்களுக்கு அனுப்பி விடுகிறது. அப்படிச் செய்வதனால் அந்தக் கால்வாய்க்கு மேலிருந்து புதிய ஜலம் வந்து கொண்டேயிருக்கிறது.

அப்படிக்கில்லாமல் அந்தக்கால் வாயானது தனக்குக்கிடைத்த ஜலத்தைக் கீழே போகவிடாமல் தன்னிடம் அடைத்துக்கொண்டால் உடனே ஜலம் தேங்கிவிடுகிறது. அந்தக்கால்வாய்க்கு மேலிருந்து புது ஜலம் வருகிறதில்லை,

அடைபடாத வேறு கால்வாய்கள் வழியே போய்விடுகிறது அதனிடம் தேங்கின ஜலமும் இருக்க இருக்கக் கெட்டுப் போகிறது.

அதுபோல நம்முடைய அறிவையும் அன்பையும் பொருளையும் சக்திகளையும் நம்மிலும் தாழ்ந்தவர்களுக்கு அர்ப்பணம் செய்து உதவி புரிந்தோமானல் மேன்மேலும் அறிவும் அன்பும் பொருளும் சக்திகளும் கிடைக்கப்பெறு வோம். அவைகளைக் கொண்டு மேன்மேலும் உலக நன்மையை நாடி உழைக்க நமக்கு யோக்யதை உண்டாகும்.

ஆகையால் நாம் ஸ்வரூபத்தைத் தேடும் ஆசைகளை ஒழித்து உலகத்தின் யோக க்ஷேமத்தையே நம்முடைய யோக க்ஷேமமாகக் கொண்டு வேலைகளைச் செய்யவேண்டும்.

இதே தத்துவத்தைத்தான் பகவத் கீதை 3-வது அத்தியாயத்தில்.

“ஸக்தா: கர்மண்யவித்வாம்ஸோ யதா குர்வந்தி பாரத।
குர்யாத்வித்வாம்ஸ்ததாஸக்த: சிகீர்ஷுர்லோகஸங்க்ர
ஹம் ॥

அதாவது“ எப்படி அவிவேகிகள் ஆசையுடன் வேலைகளைச் செய்கிறார்களோ, அப்படியே விவேகிகளும் செய்ய வேண்டியது. ஆனல் ஆசையை ஒழித்து உலக நன்மையைக் கருதிச் செய்யவேண்டியது” என்று அர்ஜுனமஹாராஜனுக்கு ஸ்ரீகிருஷ்ண பகவானல் உபதேசிக்கப்பட்டது.

வி. விசுவநாதையர், B. A., B. L.,

---

## சமாசாரம்.

---

வெண்டாமரை நாட் கொண்டாட்டம்:—1915ஹ மேமீ 8உ யில் வெண்டாமரை நாள், வழக்கப்படி மதுரையில் விமர்சையாய்க் கொண்டாடப்பட்டது. மாலை 3மணி முதல் சாயங்காலம் 6 மணி வரை சுமார் 400 ஏழைகளுக்குப் பரியாற, அன்னமளிக்கப் பட்டது. 6-30 மணி முதல் 8-மணி வரை சில மெம்பர்களும் வைதிகர்கள்சிலரும் சேர்ந்துமுதலில்உபநிஷத்தும் தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரமும் ஒருங்கே பாராயணம் செய்த பிறகு, பகவத்கீதை, ஸர் எட்வின் ஆர்னல்ட் என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய புத்தசரித்ரம், பைபில்ஜெனஸூத்ரம். ஸெண்ட் அவெஸ்டா, தேவாரம், தாயுமானவர் பாடல். திருவாய்மொழி இவைகளும் பலரால் படிக்கப் பட்டன. அன்று இம்மந்திரத்தில் நடந்த உற்சவமானது வந்திருந்த பல அந்யர்களுக்கும் மந எழுச்சியையும், பக்தியையும், உற்சாஹத்தையும் கொடுத்தது. பள்ளிக்கூடத்து மாணுக்கர் ஒருவர் ஸ்ரீஹெலி நாம்பாள் அம்மையாரைப்பற்றி ஆங்கிலத்தில் பாசுரம் ஒன்று கவநம் செய்து படித்தனர். கடைசியாக பிரஸிடெண்டு மக-ள-ள-ஸ்ரீ அ. ரங்கஸ்வாமி ஐயரவர்கள், நமது பிரஹ்மக்ஞான ஸபை உலக விகாஸத்தை எவ்விதம் த்வரிதப்படுத்துகின்றது என்பதையும், இத்தகைய் மாட்சியை யுடைய மஹாஸங்கம் ஏற்படுத்திய மஹான்களின் சிஷ்யையாகிய ஸ்ரீஹெலிநாம்பாளம்மையாரின் ஞாபகார்த்தம் நாம் கொள்ளவேண்டிய கடமையையும் நன் கெடுத்துரைத்தார். (மதுரை)

---

ஆத்தங்குடி பிரஹ்மக்ஞான சபையில் 1915 ஹ மேமீ 8உ மாலை 5மணி முதல் 7மணி வரை சுமார் நானூறு ஏழைகளுக்கதிகமாக அன்னமளிக்கப்பட்டது. இரவு 8முதல் 9-மணிவரை ஷ சங்கத்து மெம்பர்களால் மாது ஸ்ரீஹெலிநாம்பாள் அம்மையார் சரிதமும், பகவான் கௌதம புத்தர் சரிதமும், பகவத் கீதையில் 16வது அத்தியாயமும் படிக்கப்பட்டது. தற்சமயம் ஷ சபையில் அம்மையாரவர்களின் ஞாபகார்த்தமாய் வெண்டாமரைகள் பல விடத்தும் விளங்கின. (ஆத்தங்குடி).

---

பொன்னாச்சி லாட்ஜில் 8—5—15-ல் வெண்தாமரை மஹோற்சவம்:—வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டது. அன்றையதினத்தில் சுமார் 1000 ஏழைகளுக்கு மேல் அன்னமளிக்கப்பட்டது. அநேக மெம்பர்களும் அபிமானிகளும் அவ்விடத்தில் அநேக பணிவிடைகளைச் செய்தனர். சாயந்திரம் 7-மணிக்குதியாசபிகல் ஹாலில் மெம்பர்களும் அபிமானிகளும் மகாஜனங்களும் கூடினார்கள். மாதா ஸ்ரீ. ஹெலினாம்பாளின் சரித்திரத்தை முதலில் சொல்லிவிட்டு பகவத்கீதை 12அத்தியாயத்தை லாட்ஜ் சிக்ரிடெரி வெங்கிடாச்சாரியார் படித்து தமிழில் சொன்னார். Light of Asia வில் Mr. திருநீலகண்டம் பிள்ளை அவர்களாலும் உள்ளூர்ப் பாடசாலைத்தலைமை உபாத்யாயர் அவர்களாலும் சிலசில பாகங்கள் படிக்கப்பட்டதை அன்றையதினத்தில் சகல காரியங்களும் மிகுந்த சிரத்தையுடனும் பக்தியுடனும் எல்லாராலும் நடத்தப்பட்டன. அதற்காக மெம்பர்களுக்கும் அபிமானிகளும் லாட்ஜ் சிக்ரிடெரி தன் மனப்பூர்வமான வந்தனத்தைச் செலுத்துகிறார். (பொள்ளாச்சி)

——

இங்கே லாட்ஜு மீட்டிங்குகள் பிரதி வியாழக்கிழமை ஞாயிற்றுக்கிழமை ஆகவாரம் இரண்டுமுறைகள் ஒருவாறு உபயோககரமாய் நடந்து வருகின்றன. சென்றமீ இங்கே வில்லேஜ் பஞ்சாயத்து ஏற்பட்டு நடைபெறுகிறது. இம்மாதம் மூன்றும் தேதி முதல் T. S. எலிமெண்டரி பெண்பாடசாலை யொன்றுதிறக்கப்பட்டிருக்கிறது. நேற்று நமது “வெண்டாமரை”த் திருவிழா கொண்டாடப் பெற்றது. சிறுவர்களும் வயோதியர்களுமா யுள்ள சுமார் இருநூறு தாழ்ந்த வகுப்பு ஏழைகட்கு அன்னமளிக்கப் பட்டது, எலிமெண்டரி பாடசாலைப்பிள்ளைகளுக்கு சிற்றுணவு அளித்து உற்சாக மூட்டப்பெற்றது (மேலக்கடம்பூர்)

——

மாதா ஸ்ரீபிளாவட்ஸ்கி அம்மையவர்கள் மண்ணுலகில் ஸ்தூல சரீரத்தை நீத்து விண்ணுலகுக் கேகிய தினமாகிய வெண்டாமரைத்திருநாள், நாளது 1915-ஞு மேமீ 8-ம்வ அன்று பெரியகுளம் பிரஹ்மஞான மந்திரத்தில் ஷை சபையோர்களால் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. (யோகி சுந்தரராஜம்.)

——

## சிறுவர்க்குரிய விஷயம்.

---

### வாக்களித்தலை மிகச் சிரத்தையுடன் நிறைவேற்றவேண்டும்.

அன்புள்ள ஸ்வர்ண மணிகளே!

ஒரு நாள் இராமன் மிகக் கவலைகொண்டிருந்தான். ஏனெனில் தன் ஸ்நேகிதர் ஒருவருக்கு வாக்குத் தத்தமொன்று செய்துவிட்டு, அதன்படி நடக்காமலிருந்தான். இராமனையோ, அடிக்கடி அவன் தாயார், எச்சரித்திருக்கிறாள். "நாம் செய்வதாக ஒப்புக்கொள்ளும் காரியங்கள் எல்லாவற்றையும் அவசியம் செய்தே தீரவேண்டும். நம்முடைய வாக்குத் தத்தங்களில் நாம் மிகச் சிரத்தை வைக்கவேண்டும்." என்று திரும்பத் திரும்ப அவனுக்கு புத்திமதி சொல்லியிருக்கிறாள். நமமுடைய வாக்குத் தத்தங்கள், ஒரு காசுச் சர்க்கரைமிட்டாய் மாதிரி, அரை நிமிஷத்திற்குள் உடைபலாகாது. "இவன்மேல் நம்பிக்கைவைத்தல் தகாது" என்று பிறர் எண்ணுவதைக் காட்டிலும், ஒருவனுக்கு இழிவான அவமானம் வேறு வேண்டாம். ஒருதரம் ஒன்று செய்வதாக ஒப்புக்கொண்டோமாயின், அதை எப்பாடுபட்டாயினும் செய்து முடிக்கவேண்டும். யோசனையில்லாமல் ஒருபோதும் வாக்களிக்கலாகாது. அப்படி வாக்களித்தோமானால், அதைச் செய்து முடிப்பதில் தவறலாகாது. அறிவீனத்தால் அல்லது கோபம், துவேஷத்தால் தீய காரியங்களைச் செய்வதாக நாம் தீர்மானித்து, பிறகு அவை குற்றமென்று உணருவோமானல் மட்டும் அம்மாதிரி வாக்குத் தத்தங்களை நிறைவேற்றுமல் ஒழிக்கவேண்டும்.

---

* ஸ்வர்ண மணிகளுக்கு என்று ஏற்பட்டு ஆங்கில பாஷையில் நியூஸிலண்டு தேசத்தில் நடைபெறுகிற லோடஸ் பட்ஸ் ஜர்னல் என்னும் பத்திரிகையினின்று எடுத்தெழுதப் பட்டது.

34



ஆனல், நம்முடைய வாக்குத் தத்தங்களைக்கொண்டு செலுத்த இயலாமல் அசௌகர்யங்கள் நேரும்போது, பிறர் நம்மை நம்பி, அவர்கள் அசௌகர்யத்தையும் அதிருப்தியையும் அடையாவண்ணம், அவர்களுக்கு நம் இயலாமையைத் தெரிவிக்கவேண்டும். இதை அநேகர் முக்கியமென உணருகிறார்களில்லை. சொன்னபடி செய்யத் தவறுவோமானல், நாம் நற்குணசீலம் அடைந்தவர்களல்லர் என்பதும் நிச்சயமாகின்றது.

வீடொன்று கட்டப்படவேண்டுமானல், கொற்றன் முதலில்வந்து இந்த தினத்திற்குள் இன்ன மாதிரிப் பிரகாரம், இவ்வளவு தொகைக்குள் கட்டிடத்தை முடித்துக் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளுகிறான். ஒப்பந்தப்படி வேலையை முடித்துக் கொடுத்து பிறகு அவன் பணம் பெற்றுக் கொள்ளுகிறான். சொந்தக்காரரும் கொற்றனும், இருவருள் ஒருவரும் பிறழாதபடி ஒப்பந்தப் பத்திரம் ஒன்று எழுதி, அதில் இருவரும் கையெழுத்துப் போடுகிறார்கள், இதில் பிறழுபவர்களை சர்க்கார் அதிகாரிகள் தண்டிப்பார்கள். சட்டத்தின் பிரகாரம் ஒப்பந்தத்தினின்று விலகுதல் உதவாது.

முற்றிலும் நாணயக்காரர்களான உத்தமர்கள், சர்க்கார்ச் சட்டத்தின் நிர்ப்பந்தம் இல்லாதபோதுங்கூட, தாம் கொடுத்த வாக்கிற்கு இரண்டாக நடக்கமாட்டார்கள். உண்மையான தைர்யமுள்ள பையனுகட்டும் பெண்ணுகட்டும் தம் வாக்கை நிறைவேற்றுமலிரார். இவ்விதந் தவறுவது மிக அவமானமாகும். ஓரூரில் ஒரு பெண் இருந்தாள். அவள் தமையனார் தம் சொந்த ஊரை விட்டு அயலூருக்குப் போய் அங்கேயுள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் படித்து வந்தார். அவர் அயலூருக்குப்பிரயாணமாகுமுன் அச்சிறு பெண் தன்வீட்டு சமாசாரங்களைக் கிரமமாய் வாராவாரம் தன் அண்ணனுக்குக் கடிதமெழுதித் தெரிவித்து

வருவதாயும், அவர் எழுதும் கடிதங்களுக்கும் உடனுக்குடன் பதில் அனுப்புவதாயும் ஒப்புக்கொண்டாள். பிறகு அவ்வாக்குத் தத்தத்தின்படியும் நடந்தாள். அவளுடைய தமையனுருக்கும் அவளிடம் அளவிறந்த ஸந்தோஷம் ஏற்பட்டது. இதைப்படிக்கும் ஒவ்வொருவரும் எவ்வளவு இலகுவாய் வாக்களிக்கிறார்களோ, அதைவிட இலகுவாய் அதைச்செய்து முடிக்கவேண்டும். சிலவேளைகளில் வாக்குத் தத்தம் செய்வோர்கள் மறதியால் நிறைவேற்றத் தவறுகிறார்கள். ஆனால் யாவருக்கு வாக்குக் கொடுத்தோமோ அவர்கள் மறவாமல் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கடைசியாக மறதியினல் ஸ்நேஹம் போய், மநஸ்தாபம் உண்டாகிறது. இவ்வித மறதி ஏற்படாதபடி நாம் பிறருக்கு நிறைவேற்றவேண்டிய வாக்குத் தத்தங்களைக் கடிதத்தில் எழுதிக் குறித்துக்கொள்ளவேண்டும்.

•

நீங்கள் யாராவது செய்தவாக்குத் தத்தங்களை நிறைவேற்றுமலிருக்கிறீர்களா? அல்லது யாருக்காவது கடிதமெழுதவேண்டியிருக்கிறதா? அப்படியிருக்குமானல் உடனே அக்கார்யங்களைச் செய்துவிட்டு, தாமஸத்தை மன்னிக்கும்படியும் கேட்டுக்கொள்ளுங்கள். இவவிதச் சிறுகாரியங்களிலெல்லாம் நாம் ஒழுங்காயிருந்தால்தான் நம்முடைய சீலம் விருத்தியடைந்து, பெரிய காரியங்களிலும் நாம் தவறுதவர்களாயிருப்போம்.

இப்போது ஐரோப்பாவில் கோரமான யுத்தம் நடக்கின்றதே காரணமென்ன? ஜேர்மனி தேசத்தார் பேல்ஜியம் தேசத்தாரைக் காப்பாற்றுவதாகச் சொன்ன வாக்குத் தத்தத்தை மீறியதனலல்லவா? இதனல் நேரும் கொடிய உயிர்ச் சேதங்களுக்கு அளவு சங்கியை யுண்டோ! அந்தோ, பரிதாபம்.!

நம்முடைய ஸ்வர்ணமணி மாலைச் சங்கத்துச் சிறுவர்கள், சிறுமிகள் பலர் தம் அப்ளிகேஷன் கார்டுகளில் வாக்களித்திருக்கின்றதைச் சற்று நினைத்துப் பார்க்கக் கடவர். அவர்கள் நிறைவேற்ற வேண்டிய வாக்குத் தத்தங்கள் எல்லாம் இப்பத்திரிகையின் அட்டையில் எழுதப்பட்டிருக்கின்றன.

அவைகளில் முதன்மையானது, ஸ்வர்ணமணிமாலைச் சங்கத்தின் உறுதிமொழியாகிய நான்கு, வசனங்களையும் திரும்பத் திரும்ப நம் மநத்தில் ஞாபகமூட்டிக்கொள்ளும் பொருட்டு பிரதி காலையிலும் படித்துவரவேண்டும். எல்லா உயிர்ப்பிராணிகளிடத்தும் இரக்கம் கொள்வதும் மெலியார்க்குபரோபகாரம் செய்வதும், எப்போதும் நல்லஎண்ணங்களையும், நல்ல வார்த்தைகளையும், கார்யங்களையுமே பின்பற்றுவதும், மற்றைய ஸ்வர்ணமணிகளும் உறுதியுள்ளவர்களாக விருக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்வதுமே ஸ்வர்ணமணிகள் நிறைவேற்றவேண்டிய இரண்டாவது வாக்குத்தத்தம்.

ஆகையால் ஒவ்வொரு ஸ்வர்ணமணியும் இவ்வாக்குத்தத்தங்களை உண்மையாய்க் கொண்டுசெலுத்துவார்களென்று நம்புகிறேன். அப்போதுதான் நமக்கும் பிறருக்கும் சந்தோஷமும் சுகமும் ஏற்படும்

வஸந்தானந்தன்.

---

# தியானக்கிரம விஷயம்.

## எப்ரல் மாசம்.

10. மேன் மார்க்கத்தில் செல்ல இச்சிப்பவன், ஒவ்வொரு காரியத்தையும் தனக்குத்தானே ஆலோசித்து நிதானிக்கப் பயிலவேண்டும்; ஏனென்றால். இவ்வுலகத்திலுள்ள பெருங் கெடுதிகளிலும், பந்தங்களிலும் மித்தியாசாரமொன்று மிகக் கொடியது. அதினின்று உன்னை நீ முழுதும் விடுவித்துக் கொள்ளவேண்டும்.

11. மற்றவர்களைப் பற்றி உன் அபிப்பிராயம் உண்மையானதாக விருக்கவேண்டும். அவர்கள் விஷயமாய் உனக்குத் தெரியாத சங்கதிகளில் நீ அபிப்பிராயங்கொள்ளக் கூடாது. அவர்களெப்பொழுதும் உன்னைக் குறித்து நினைத்துக் கொண்டிருப்பதாக நீ சங்கியாதே.

12. யாரேனு மொருவன் உன்னிடத்தில் கோபமாய் பேசினால் "எனக்கு அவன் விரோதி, எனக்குக் கெடுதி செய்ய விரும்புகிறான்" என்று நினையாதே. அநேகமாய் வேறு யாராவதொருவன், அல்லது வேறு ஏதாவது ஒரு விஷயம் அவனைக் கோபமூட்டியிருக்கலாம். நீ அவனுக் கெதிர்ப்பட்ட காரணத்தினால் அக்கோபத்தை உன்னிடம் அவன் காட்டலாம். அவனுடைய செய்கை மூடத்தனம்.கோபம் எப்பொழுதும் மூடத்தனம் தானே; ஆகையினால் அவனைப் பற்றி நீ அசத்தியமாய் நினைக்கவேண்டாம்.

13. சிஷ்யன் குருநாதனோடு ஒருமைப்பட்டவன்; அவன் தனதெண்ணத்தை குருநாதனெண்ணத்தோடு,சேர்த்து மாத்திரம் பார்க்கவேண்டியது, அது ஒரு மைப்பட்டதா படாததா என்பது உடனே தெரியும். ஒருமைப்படாவிடில், அவ்வெண்ணம் தப்பெண்ணம். அவன் அதை

உடனே மாற்றிக் கொள்கிறான். ஏனெனில் சர்வக்ஞ தையால் அவரது எண்ணம் குற்றமற்றது.

14. அடிக்கடி உன் எண்ணங்களை நிதானித்துப் பார். "குருநாதன் இதைக் குறித்து என்ன நினைப்பார், இவ்வித சந்தர்ப்பங்களில் அவர் என்ன சொல்வார், செய்வர் என்ற விதமாயாலோசிக்க வேண்டும். எதை குருநாதன் செய்யமாட்டார், சொல்லமாட்டார், நினைக்கமாட்டார் என்று நீ நினைக்கிறாயோ, அதை நீ எப்பொழுதும் செய்யவுங் கூடாது, சொல்லவுங் கூடாது, நினைக்கவுங் கூடாது.

15. அநித்தியத்தினின்று நித்தியத்திற்கு வழி காட்டும்.

அந்தகாரத்தினின்று பிரகாசத்துக்கு வழி நடத்தும்.

மரணத்தினின்று தப்புவித்து அமிருதத்துவத்திற்குக் கொண்டு சேர்ப்பியும்.

16. இவ்விரண்டையும் (நித்யத்தையும் அநித்யத்தையும்) பகுத்தறியும் வரை, ஈசுவரன் வழியே நிற்காதவர்களாகிறார்கள். ஆகையால் மேற் சொல்லிய பகுத்தறிவே முதற்படி.

17. இது நீதி, இது அநீதி யென்றறிவது பிரயாசமில்லை. ஏனெனில் குருநாதனைப் பின்பற்ற விரும்புமவர்கள், எது எப்படி நேரிட்டாலும் நீதி வழியே செல்ல முன்னமேயே தீர்மானித்தவர்களாவார்கள்.

18. குப்த வித்தையில் நீதிக்கும் அநீதிக்கும் மத்தியில் யாதொரு படியும் ஏற்படவில்லை. நீதி எதுவோ அது உன்னால் எவ்வகையிலும் செய்யப்படவேண்டும். அநீதி எதுவோ, அது உன்னால் எவ்வகையிலும் தவிர்க்கப்பட

வேண்டும். இவ்விஷயத்தில் அறியாதவர்கள் என்ன நினைப்பினும், என்ன சொல்லினும், அவர்களுடைய அபிப்பிராயம் கவனிக்கத் தக்கதில்லை.

19. முக்யமிது, அமுக்யமிது, என்பதை நீ தெரிந்து கொள்ள வேண்டும். அநீதியை ஒழித்து நீதி தவறாது நடப்பதில் நீ மலைபோல் உறுதியாய் நில். எப்போதும் அற்ப விஷயங்களில் நீ இதரர்களுக்கு இணங்கியே நட.

20. ஈசுவர நியதியின் குப்தமான விதிகளை நீ ஆழ்ந்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளவேண்டும். நீ அவைகளை யறிந்துகொண்டு, அவைகளுக் கேற்ப உனது வாழ்நாட்களை, உனது விவேகத்தையும் அநுபவ ஞானத்தையும் கொண்டு ஒழுங்காக்கிக் கொள்ள வேண்டும்.

21. ஈசுவர சைதந்யம் உன்னிடத்தும் உன் சகோதரனிடத்தும் பொதுவாயிருப்பதால், அதன் வழியே அவனுக்கு நீ உதவலாம், அச்சைதந்யத்தை அவனிடத்து மலரச் செய்வதன் மூலமாய், அவனுக்குதவி அவனைக் குற்றத்தினின்று விடுவிப்பாய்.

22. உனது சரீரங்களையே நீ (ஆத்மா) என்று தவறி எண்ணாதே. ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண சரீரங்கள் நீ அல்ல. அவைகளில் ஒவ்வொன்றும் தனக்கு வேண்டியதைப் பெறுதற் பொருட்டே, நீ (ஆத்மா) என நடிக்கும். ஆனால் நீ அவைகளல்ல வென்று அறிய வேண்டும். நீ அவைகளின் யஜமானன்.

23. உன் சரீரம் ஒன்றை விரும்புகையில் உனக்கு அது யதார்த்தமாய்த் தேவையா என்று நின்று நிதானி. ஏனெனில் நீ ஈசுவரனே. ஈசுவர ஸங்கல்பம் போலவேதான் நீயும் இச்சிப்பா யென்றாலும், உனக்குள்ளிருக்கும் ஈசுவ

ரனை நீ அறிய, உனக்குள்ளேயே அந்தர் முகப்பட்டு, அவரது சப்தத்தை உற்றுக் கேள். அது உனது தொனியே தான்.

24. உன் காமசரீரம் அதற்குரிய ஆசைகளுடன் கூடியது. உன்னைக் கோபங்கொள்ளும்படியாகவும், கொடிய வசனங்களைப் பேசும்படியாகவும், பணத்தில் பேராசை கொள்ளும்படியாகவும, பிறர் பொருளைக் கண்டு அசூயை அடையும்படியாகவும் நீ மநக்கிலேசத்திற்குட்படும்படியாகவும் அது விரும்பும். இவை போன்ற அநேகங்கள் அதற்குத் தேவை. இவைகள் ஒன்றும் உனக்கு அவசியமில்லை. இவ்விதம் உனக்கு அவசியங்களின்னவை, உனது சரீரத்தின் அவசியங்களின்னவை யென்று நீ பகுத்தறிய வேண்டும்

25. இம்மேன் மார்க்கத்தில் நீ அறிய வேண்டியது அதிக மிருக்கிறது. இதிலும் உனக்குப் பகுத்தறிவு வேண்டும். அறிந்து கொள்ளத் தகுதியானது இன்னதென்று நீ ஆழ்ந்து நிதானிக்க வேண்டும். எல்லா அறிவும் பிரயோஜனகரம் தான். காலாந்தரத்தில் ஸர்வ ஞானமும் உனக்கேற்படும் என்றாலும், நீ சொற்ப ஞானமுள்ளவனாகவிருக்கும் வரை, எவ்வறிவினால் அதிக உபயோகமுள்ள விதமாகப் பிறர்க்குதவி செய்யலாம் என்றறிந்து, அதைக் கற்க ஆரம்பித்தல் வேண்டும்.

26. செய்கையில் உண்மையாயிரு. வேஷம் போடாதே.

27. சுயநயம், பரோபகாரம் இவைகளையும் நீ திட்டமாய்ப் பகுத்தறிய வேண்டும். சுயநயம் பல ரூபங்களை உடையது. அது ஒரு ரூபத்தோடு தோன்றும் போது, நீ, அதைக் கொன்றுவிட்டு, அது முற்ற ஒழிந்தது என்று எண்ணிக் கொண்டிருக்கும்போதே, இன்னொரு ரூபத்தோடு முன் பலத்துடனேயே கிளம்பி நிற்கும்.

41



28. நிராதாரமாகவும், விவரமின்றியும், ஒன்றிருக்கப் பத்தாகவும் நீ ஒருபோதும் பேசாதே. பிறர் செய்கைகளுக்கு நீயாகக் காரணங்கள் கல்பிக்காதே. எவரைப் பற்றியாவது கெட்ட கதை யாரிடமிருந்து நீ கேள்விப்பட்டாலும், நீ அதை மறுபடியும் உன் வாக்கினால் சொல்லிப் பறை சாட்டாதே. எவ்விதத்தவறும் ஏற்படா வண்ணம் நிதானித்து ஆலோசனையுடனே பேசு.

29. உபயோகமிது, உபயோகமற்றதிது என்று நீ அறிந்து கொண்டால் மட்டும் போதாது. உபயோகமுள்ளவைகளிலேயே தாரதம்யத்தையும் (அதாவது எது அற்ப உபயோகமுள்ளது, எது மிகுந்த உபயோகமுள்ளது என்று) நீ அறிய வேண்டும்.

ஏழைகளுக்கு அன்னமிடுவது மேன்மை பொருந்திய நல்ல உபகாரச் செயல். ஆனால் அவர்கள் சரீரங்களைப் போஷிப்பதைவிட அவர்களுடைய ஜீவன்களை விருத்திக்குக் கொண்டு வருவது மிக்க உபயோகமுள்ள மேலான காரியம்.

பணமுள்ள எவனும் சரீரத்திற்கு உணவளிக்கக் கூடும். ஆனால் ஞானமுள்ளவர்கள் தான் ஜீவனைப் போஷிக்கத் திராணியுள்ளவர்கள்.

30. எக்காரியத்தைச் செய்தல் சிரேஷ்டம் என்பதைத் தெரிந்து கொள்ள முயலுவாய். நீ கவனிக்க வேண்டியது, காரியம் பெரிது, சிறியது என்பதல்ல. நீ கவனிக்கவேண்டியது, உலகம் நல்லதென்று புகழும் ஒரு பெருங் கார்யத்தைவிட குருநாதனது பிரவிர்த்திக்கு நேரே அநுகூலமாயிருக்கும் ஒரு சிறு கார்யம் மிகவும் மேன்மை என்பதேயாம்.

## மேமாசம்.

மாசாந்தர அப்பியாசம்:—உனக்கு சொந்தம் என்ற பாவனையை நீ ஒழித்துவிடவேண்டும்; நீ அதிகமாக விரும்பும் வஸ்துக்களையும், நீ மிகவும் அருமையாக நேசிக்கும் ஜனங்களையுங்கூட கர்மவிதி உன்னைவிட்டு நீக்கிவிடலாம், அப்பொழுதுங்கூட நீ சந்துஷ்டனாயிருத்தல் வேண்டும். எந்தவஸ்துவையும், விடுவதற்குச் சித்தமாயிரு.

### வாரஅப்பியாசம்

1வது வாரம்:—நேரே ஸத்குரு தரிசன பாக்கியம் கிடைப்பதற்கு முந்தியே, நீ அப்பியாஸத்தால் ஆசையின்மையை அடையலாம்

2வது வாரம்:—அடையும் பொருள் எவ்வளவு பெருமையுள்ளதாக விருக்கினும், ஸ்வயநன்மையை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்து மென்பதை நீ ஞாபகத்தில் வைத்துக்கொள். இது போனாலன்றி நீ குருநாதனேவலுக்குட்பட்டு நடக்க முழுதும் சுதந்திரனல்லன்.

3வது வாரம்;—பலனைப் பார்க்க வேண்டுமென்ற உத்தேசத்தின்பேரில் வேலையைச் செய்யாதே. ஒரு வேலையைச் செய்தால் அதின் பலன் தன்படியே உண்டாகும். வேலையைச் செய்வது, வேலையை உத்தேசித்தே தவிர பலனை உத்தேசித்தல்ல-(இவ்விடத்தில் கீதை 2-ம் அத். 47-வது சுலோகம் கவனிக்கத்தக்கது.)

3வது வாரம்:-சமர்த்தனாகக் காட்டிக்கொள்ளவேண்டுமென்றாவது உலகத்தார் மெச்சப் பிரகாசிக்க வேண்டுமென்றாவது இச்சிக்காதே. பேச ஆசைப்படாதே.

4வது வாரம்:—இன்னொரு மனிதன் என்ன செய்தாலென்ன? என்ன சொன்னாலென்ன? எவ்வித அபிப்பிராய

முள்ளவனு னாலென்ன? இவைகள் உன்னுடைய காரியங்களல்ல. அவைகளில் ஒரு விதத்திலும் சம்பந்தப்படாமல் நீ இருக்கப் பயிலவேண்டும்.

5வது வாரம்:—ஸித்திகளுக் காசைப்படாதே; உனக்கவைகள் வேண்டியது நன்மையென்று குருநாதன் அறியுங்காலத்தில் அவைகளுனக்கு வரும்.

## தினசரி அப்பியாசம்.

1. நேரே ஸத்குரு தரிசன பாக்கியம் கிடைப்பதற்கு முந்தியே நீ அப்யாஸத்தால், ஆசையின்மையை அடையலாம்.

2. அநேகருக்கு ஆசையின்மை யென்ற சாதனம் கஷ்டமுள்ளதாயிருக்கின்றது; ஏனெனில், தங்களுடைய இச்சைகளேயே அவர்கள் தாங்கள் என்று நினைத்திருக்கின்றார்கள். தங்களிடத்திலுள்ள வேறு, வேறான இச்சைகளும், விருப்பு வெறுப்புக்களும் போய்விடாமல், தங்களுடைய (ஆத்மாவின்) இருப்பே போய்விட்டதாக எண்ணுகின்றார்கள்.

3. இவ்விதமுள்ளவர்கள் குருநாதனைத் தரிசியாதவர்கள், அவர் சந்நிதானத்தின் பரிசுத்தவொளியில், அவரைப்போலாக வேண்டுமென்ற இச்சை ஒன்று தவிர மற்றெல்லா இச்சைகளும் நசிக்கின்றன.

4. பலர் இச்சிக்கும் திரவியம், அதிகாரம் முதலிய வஸ்துக்கள் அடையத்தக்கன வல்லவென்பது முந்தியே நீ பகுத்தறிவினால் (நித்யா நித்யவஸ்து விவேகத்தால்) தெரிந்துகொண்ட விஷயம், இதை வாக்கினால் சொல்வதுமட்டும் போதாது. யதார்த்தமாய் மனத்திலுணரவேண்டும். அப்பொழுது அவைகளிடமுள்ள எல்லா இச்சைகளும் போய்விடும்.

5. சிலர் ஸ்வர்க்காநுபவத்தையடைய விரும்பியாவது, அல்லது, பந்த நிவிர்த்தியைத் தாங்கள்மாத்திரமேபெற இஷ்டப்பட்டாவது, இவ்வுலக வியாபாரங்களை விடுகிறார்கள். இத்தவறுதலுக்கு நீ உட்படவேண்டாம்.

6. நீ முற்றிலும் தன்னை மறந்திருந்தால்; எப்பொழுது பந்த நிவர்த்தியாகும்; எவ்வித சுவர்க்கம் கிடைக்குமென்பதை எப்படி நீ ஆலோசித்துக் கொண்டிருகக்கூடும்?

7. நீ அதிகமாய் விரும்பும் வஸ்துக்களையும், நீ மிகவும் அருமையாய் நேசிக்கும் ஜனங்களையும் கூட கர்மவிதி உன்னை விட்டு ஒரு வேளை நீக்கிவிடும். அப்பொழுதுங்கூட நீ சந்துஷ்டனாயிரு. எந்த வஸ்துவையும் எவ்வித வஸ்துவையும், விடுவதற்குச் சித்தமாயிரு.

8. அடையும் பொருள் எவ்வளவு பெருமையுள்ளதாக விருப்பினும், ஸ்வய நன்மையை விரும்பிய எல்லா இச்சைகளும் பந்தப்படுத்துமென்பதை நீ ஞாபகத்தில் வை. இது போனாலன்றி நீ குருநாதனேவலுக்குட்பட்டு நடக்க முழுதும் சுதந்திரனல்ல.

9. சுய நன்மையை நாடிய இச்சைகளெல்லாம் போனாலுங்கூட உனது பிரவர்த்தியின் பலனைப் பார்க்க நீ யிச்சிப்பாய். அதுவும் தகாது.

10. யாருக்காவது நீ உதவி செய்தால் அவ்வுதவி எவ்வளவு பயன் பெற்றது என்றறிய நீ விரும்பாதே. அதை அவனுமறிய வேண்டும் என்றும் உன்னிடத்தில் அவன் நன்றி செலுத்தவும் வேண்டும் என்றும் நீ இச்சிக்கலாகாது.

(இன்னும் வரும்)

கே. எஸ். இராமசந்திர ஐயர்

45

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 6 } 1915ஹு ஜூன்மீ
ராக்ஷஸ ஹு ஆனிமீ { பகுதி 2

## தற்கால நிலைமை.

தியஸாபிகல் எடுகேஷனல் டிரஸ்டு என்ற பிரஹ்மக்ஞான வித்தியாபிவிர்த்தி ஸபையின் முதல் வருஷத்து ரிப்போர்ட்டானது அச்சபையின் காரியதரிசியால் பிரசுரம்செய்யப்பட்டிருக்கிறது. அந்த பிரஹ்மக்ஞான வித்தியாபிவிர்த்தி சபையானது 1913ஹு ஏப்ரல்மீ 25உயில் சட்டப்பிரகாரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. இந்தியாதேசத்தில் பலமத வேறுபாடுகளைக் கொண்டாடுகிற பல வகுப்பினர்களிருப்பதால், இவர்கள் எல்லோரிடத்திலும் நடுநிலைமை பொருந்திய இராஜாங்கத்தாரால் மதவிஷயங்களில் மாணுக்கர்களுக்கு கல்விகற்றுக்கொடுப்பது சாத்தியமன்று. உலகத்தின் கண்ணுள்ள முக்கிய மதங்களின் கொள்கைகளும் தத்துவங்களும் ஸமரஸமாயுள்ளனவென்று வற்புறுத்துகின்ற பிரஹ்மக்ஞான ஸபையானது இந்தியாவில் லௌகிகக் கல்விப்பயிற்சியுடன் மதவிஷயங்களிலும் கல்வி கற்றுக்கொடுக்கத் தகுதியுள்ளதாயிருக்கின்

றது. நமது தேசமானது உயர்ந்த நிலைமையை யடைந்து இகபர ஸம்பத்துக்களுடன் கூடினதாய்ச் செய்ய நமது வாலிபர்கள் விவேகாபிவிருத்தியை மட்டும் கவனித்தல் போதுமானதன்று. சீலம், தைரியம், மனோதிடம், ஊக்கம், ஆர்ஜவம், பக்தி, விடாமுயற்சி முதலிய தெய்வஸம்பத்துக்களோடு கூடினவர்களாய்ச் செய்ய, குருகுலங்கள் போல வித்யாசாலைகள் அமையவேண்டும். அவ்வித வித்யாசாலைகளை ஸ்தாபித்தலையே ஒரு ஸங்கல்பமாகக்கொண்டு பிரஹ்மஞான வித்தியாபிவிர்த்தி ஸபையானது சென்ற இரண்டு வருஷங்களாக அவ்வித வித்யாசாலைகளை நூதனமாக ஸ்தாபித்து நடாத்தியும் சில பழைய வித்யாசாலைகளைக் கைக்கொண்டு மேற்சொல்லிய கருத்துக்கிசைய அவைகளில் தக்க மாறுதல்களைச் செய்தும் வந்திருக்கிறது.

***

இப்பொழுது அச்சபையின்கீழ் 15 வித்யாசாலைகள் நடைபெற்று வருகின்றன. அவைகள் இந்தியாவின் வடபாகத்தில் பாங்கிபூர், கான்பூர், காசி, முதலிய இடங்களிலும் மேல்பாகத்தில் பவநகர் என்ற இடத்திலும் தென்னிந்தியாவில் பல்லாரி, கும்பகோணம், மதனபள்ளி, மதுரை, பழனி, புரோதட்டூர், வாயல்பாட், முதலிய இடங்களிலும் இருக்கின்றன. அவைகளில் நாலு பள்ளிக்கூடங்கள் பெண்பிள்ளைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வித்தியாசாலைகளில் மொத்தமாக 2603 வித்தியார்த்திகள் கற்றுவருகிறார்கள். 122 உபாத்தியாயர்கள் கல்வி கற்றுக்கொடுக்கிறார்கள்.

***

மதனபள்ளியில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வருகிற ஹைஸ்கூல் என்ற வித்யாசாலையானது மதராஸ் சர்வகலாசாலையைச் சார்ந்த ஒரு காலேஜாக அடுத்த

ஜுலை மீ 15உ முதல் ஏற்படப்போகின்றது. அதற்கு மதனபள்ளி பிரஹ்மக்ஞான காலேஜ்(Madanapalle Theosophical College) என்று பெயர். மதனபள்ளி என்பது வடஆற்காடு அல்லது சித்தூர் ஜில்லாவில் உள்ள ஒரு ஊர். அது சமுத்திர நீர்மட்டத்திற்கு மேல் 2500 அடி உயரத்தில் மலைப்பிரதேசத்திலிருப்பதால் சீதோஷ்ணம் ஸமமாய் தேகத்திற்குஆரோக்கியமான பிரதேசம். இந்து மாணுக்கர்களுக்குஸநாதனதர்மத்திலும், மகம்மதியகிறிஸ்துவமாணுக்கர்களுக்கு அவரவர்களுக்குரிய சமயநூல்களிலிருந்தும் மதவிஷயமாய்க்கற்பிப்பதற்கு ஏற்பாடுகள்செய்யப்பட்டிருக்கின்றன. தத்தம் சமயங்களில்முக்கியமானபொதுவிஷயங்கள் மாத்திரம்மாணுக்கர்கட்குப்போதிக்கப்படக்கூடியதேதவிர சச்சரவையும் வைஷம்யத்தையும் உண்டாக்கக்கூடிய சமய பேதங்கள் வற்புறுத்தப்படமாட்டா. அன்பையும், பக்தியையும், பரோபகாரஞ் செய்யுங் குணத்தையும் அவரவர் மதங்களின் ஆதாரத்தைக்கொண்டே விருத்திசெய்ய முயற்சிக்கப்படுகின்றது. மற்ற விவரங்கள் எல்லாம் அவ்வித்தியாசாலை அதிகாரிகளால் பிரசுரம்செய்யப்பட்ட அறிக்கைப்பத்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. ஸ்ரீமான் ஜீனராஜதாஸர் கூறியிருக்கிற பிரகாரம் அது தென்னிந்தியாவில் ஒருபிரதான வித்யாசாலையாக விருத்தியடைவதில் ஐயமில்லை.

***

இராமநாதபுரம்ஜில்லாவில் விருதுபட்டியிலுள்ள க்ஷத்திரிய வித்யாசாலை என்ற நாடார்க் கல்விச்சாலையின் மேல் பார்வையானது திருப்தியான நிலைமையில் இல்லையென்றும் அந்தக்காரணத்தால் அவ்வித்தியாசாலையின் உபயோகம் தடை படக்கூடியதென்றும் வெளியாகின்றது. அப்பட்டணத்தில் அவ்வகுப்பினர் செல்வாக்குடன் கூடினவர்களாயும் அவ்வித்யாசாலைக்குத் தகுந்ததிரவியஸகாயமிருப்

பதாலும் அங்குள்ளவர்கள் ஐக்கியத்தோடு பொதுநன்மையை நாடி ஒன்றுகூடி அப்பள்ளிக்கூடத்தை உயர்ந்த ஸ்திதிக்குக் கொண்டுவருவது பிரயாசமல்ல.

***

சென்ற டிஸம்பர் மாதத்தில் அடையாற்றில் கூடின உதயநக்ஷத்திர சங்கத்தில் உபந்யாசம் செய்த அச்சங்கத்தின் ரக்ஷகராகிய (Protector) மாது ஸ்ரீ அன்னிபெஸண்டு அம்மையாரவர்கள் அச்சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் இவ்வருஷத்தில் கருத்திற்கொண்டு ஆசரணையில் உபயோகிக்கத்தக்க ஒரு வாக்கியத்தை வெளியிட்டனர். அவ்வாக்கியமானது 'ஜகத்குருவானவர் அதிசீக்கிரத்தில் அவதரிக்கின்றனர்' "Behold I come quickly" என்பதாம். ஜகத்குருவென்றால் தேவர் மனிதர் முதலிய எல்லா ஜீவராசிகளின் விகாஸமுறைக்கும் அத்தியக்ஷராக விருந்து ஆசாரிய ஸ்தானத்தை வகிக்கின்றவர். அது ஒரு அதிகார புருஷரின் ஸ்தானமாகும். அந்தஸ்தானத்தை கல்பந்தோறும் வகிக்கின்றவர் மாறுவர். இப்போது அந்த ஸ்தானத்தை நம்முடைய புராணங்களில் கூறப்படுகின்ற **மைத்திரேயர்** என்ற ரிஷி வகிக்கின்றார். அவருடைய நாமத்தினாலே அவர் **அன்பின் உறைவிடம்** என்பது வெளியாகின்றது.

***

உலகத்தில் ஔபசாரிகமாக வழங்கிவரும், ஜகத்குரு என்னும் நாமம் உண்மையில் அவருடையதே. மனிதன் உஜ்ஜீவிக்கும்பொருட்டு ஸ்தாபிக்கப்பட்டு உலகத்தில் தழுவப்படும் உயர்ந்த மதங்கள் யாவும் அவரால் நேராகவாவது அல்லது அவரது ஆதரவின்மீது அவரது சிஷ்யர்களாலாவது ஸ்தாபிக்கப்பட்டவை. மனிதர்களுடைய அவிவேகத்தினாலும் மௌட்டியத்தினாலும் இம்மதங்களில் பல

விபரீத வேறுபாடுகள் கலக்கப்பட்டபோதிலும் அவைகளின் அந்தரங்க தத்துவங்கள் ஒன்றோடொன்று தழுவியே நிற்கின்றன. அவர் திரிலோக சம்பந்தமாகவும் பரமாசாரியராக விருப்பதால், இப்பூலோக சம்பந்தமான ஸ்தூல சரீரத்தையும் மற்ற மனிதர்களைப்போல தரித்துக் கொண்டும், அவர் அதிகாரத்திற்குரிய தர்மமானது பெரும்பாலும் சூக்ஷ்மலோகங்களிலிருந்து செய்யப்படுவதால் பெரும்பாலும் மனிதர்கள் அணுகாத இடத்தில்வசித்துக்கொண்டும் யோகவலிமையாலும் ஸ்தூலசரீரத்திற்கு ஜரைமுதலியவற்றை தடுக்கின்ற மனச்சஞ்சலமின்மைமுதலிய குணங்களாலும்நெடுங்காலம் ஓரேஸ்தூலசரீரத்திலிருந்துகொண்டும் உலகத்தில்முக்கியமானபலகாலங்களில்ஜனஸமூகங்களிற்றோன்றி, அதர்மம் ஒன்றுகூடி விகாஸமுறையில் உலகத்தோர் முன் தடையாக நிற்பதை அப்புறப்படுத்தியும் மானிடர்கள் மேற் செல்லுமாறு அவர்களுக்கு உதவி புரிகின்றனர்.

***

தற்காலமானது அவ்வித காலங்களில் ஒன்றாயிருக்கிறது. அவைகளின் விசேஷகுணம் யாதெனில் நெடுநாளாக ஜனசமூகங்களின் அபிவிருத்திக்கு ஆதாரமாகக் கொண்டாடப்பட்ட கொள்கைகள் அந்தந்தகாலதர்மத்திற்கு ஒவ்வாதனபோல் காணப்படுவதும், அவைகளில் தக்க மாறுதல்கள் செய்யப்படுவது அவசியமென்று ஏற்படுவதும்தான். இவ்வித மாறுதல்களை திடீரென்று ஏற்றுக் கொள்ளுதல் விகாஸமுறையில் தாமஸகுணத்தோடு மெல்லமெல்லச் செல்ல விரும்பும் மனித இயற்கைக்கு விரோதமாயிருத்தலால் அதை விரைவுசெய்வதற்கு உலகத்தில் சமாதான மின்மையும் குழப்பமும் உண்டாவதற் கேதுவாகிய யுத்தம் நிகழ்வதும் அதன் முடிவில் உலகத்தின் விகாஸ முறைக்குரிய சரித்திரத்தின் ஒரு நூதன அத்தியாயம் துவக்குவதும் இயல்பாக விருக்கின்றது.

ஈசுவரன் அவதரிக்குமுன்னர் உலகத்தில் அதர்மம் ஒன்றுகூடி ஹிரண்யகசிபு, இராவணன், கம்சன் முதலானோர்களாக ரூபம் தரித்ததாகவும், அவ்வதர்மங்களை நாசம் செய்து தர்மத்தை நிலைநிறுத்த அவதாரம் செய்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன. ஈசுவரனின் கீழுள்ள அவதாரபுருஷர்கள் அவதரிக்கும் காலத்திலும், அவைபோன்ற விகங்கினங்கள் குறைந்த அளவில் தோன்றக்கூடியதே. ஒரு கல்பகாலத்திற்குரிய தர்மங்கள் மற்றொரு கல்பகாலத்திற் கொவ்வா. இடைஞ்சலை உண்டுபண்ணுவதால் அவைகள் அதர்மங்களையொக்கும். ஆகையால் தர்மங்களைக் கால இயற்கைக்குத் தக்கவாறு மாற்றுதலே அதர்மத்தை நாசஞ்செய்தலாகும். இவ்விதம் தர்மமானது யுகாந்தரங்களில் மாறுகிறது என்றும் அவைகள் கால இயற்கையில் சிறுகச்சிறுக மாறுவதோடு ரிஷிகளும் மாற்றுகிறார்களென்றும் நம்முடைய சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

***

நமது இந்துமதத்தின் மாறுதல்களைக் கவனித்துப் பார்க்கின் வேதத்தின் கர்ம காண்டத்தின் விதிகளையும் ஸ்மிருதிகளில் ஆச்ஞாபிக்கப்பட்ட முறைகளையும் கைக்கொண்டு அவைகளினின்று வழுவாமல் ஒருவன் ஒழுகுவானாகில் அவன் வாழ்நாள் முழுவதும் அநேக நுட்பமான கிரியைகளால் நிரம்பப்பட்டதாய்விடும். அவைகள் மனதையும் சரீரத்தையும் அடக்கி சித்தசுத்தியை உண்டுபண்ணுவதற்கு முக்கிய ஸாதனமாயிருப்பினும், காலகதியில் அவைகளை அனுஸரிப்பதற்குரிய சௌகரியங்கள் குறைந்து அவைகளின் பிரயோஜனத்தையும் கருத்தையும் பரியாலோசனை செய்யக்கூடிய மனதின் சூக்ஷ்மம் அதிகரிக்க, அக்கர்மங்களில் கால இயற்கைக்குத் தகாதவைகள் கைவிடப்பட்டு, மாற்றத்தக்கவைகள் விவேகம், ஞானம் இவைக

ளால் மாற்றத் தக்கவைகளாய்விடுகின்றன. இது பிரதானமாய் ஞானமார்க்கத்தில் கைக்கொள்ளப் படுகிறது. இம்மார்க்கம் ஸ்ரீ சங்கராசாரியராலும் கௌதம புத்தராலும் வற்புறுத்தப்பட்டது. புத்தியினால் புத்திக்கு அதீதமான விஷயங்களை கிரஹிக்க முயற்சிப்பதில் புத்தி தத்தளித்து விபரீதமான வழிகளில் செல்லும் சமயங்களில், ஜீவனுனவன் தன்னுடைய சக்தியின்மையை அறிந்து ஈசுவரனைச் சரணமடைந்து பக்தி பரவசத்தால் தன்னை மறக்கக்கூடிய நிலைமையில் தனக்கு சக்தியும் ஞானமும் விளித்திருக்கிறதை பக்தி மார்க்கத்தில் அறிகிறான். பக்திமார்க்கத்தை போதித்த ஆசாரியர்களாகிய ஸ்ரீராமாநுஜர் சைதன்னியர் முதலானோர் இதை வற்புறுத்தி யிருக்கிறார்கள்.

***

ஆகையால் இத்தேசத்திலே பல காலங்களில் பெரியோர்கள் தோன்றி ஸநாதன தர்மத்திலும் அதை அநுசரித்து நிற்கின்ற ஆசாரங்களிலும் அந்தந்தக் காலங்களுக்கு ஏற்ப அவசியமானபாகத்தை வற்புறுத்தியும், நூதனமுறைகளை ஏற்படுத்தியுமிருக்கின்றனர்.

***

பல தேசங்களிலும் பல மதஸ்தர்களுள்ளும் புராதனமாய் ஏற்பட்ட விதிகளும் முறைகளும் வழக்கங்களும் தற்காலத்தில் அந்தந்த தேசங்களிலும் மதஸ்தர்களுள்ளும் தோன்றும் நூதன நிலைமைகளில் பலவாறு ஒவ்வாதவைகளாயிருக்கின்றன. அவைகளை இன்னும் அதிகமாக ஒவ்வாமல்செய்ய இந்த யுத்தத்தின்மூலமாய் ஏற்படும் நூதன சம்பவங்கள் காரணமாயிருக்கின்றன. இந்தியாவில் அநேக ஆயிர வருஷங்களாக இந்துஜனஸமூகங்களின் சம்பந்தங்களை ஒழுங்குபடுத்தி வந்த வருணங்களும் ஆசிரமங்களும்

அவைகளைக் காப்பாற்றிவந்த தர்மங்களினின்றும் வேறுபடுவதால் பழைய வழிகளில் நிலைநிற்பது சாத்தியமிராதுபோலக் காண்கிறது. ஒவ்வொரு ஜாதியாரும் மற்ற ஜாதியாரைவிட்டு பிரத்தியேகமா யிருந்துகொண்டு அவரவர்களுக்கு ஏற்பட்ட கொள்கை, வழக்கம், வழிபாடு, ஆசாரம் முதலியவைகளைக் கைக்கொண்டு வந்ததுபோல் இனிமேல் தனித்து நிற்கமுடியாது. உலகமுழுவதும் அச்சிடப்பட்ட கிரந்தங்கள் மூலமாயும், பத்திரிகைகள் மூலமாயும், சுலபமாய் சஞ்சரிக்க ஸாதனமாயிருக்கின்ற ரயில்,புகைக்கப்பல் முதலிய யந்திரங்கள் மூலமாயும், ஒருவரோடு ஒருவர் சம்பாஷணைசெய்ய ஸாதகமாயிருக்கும் ஆங்கிலேயமுதலிய உலக வியாப்தியையுடைய பாஷைகளாலும், உலகமுழுவதும் இளைஞர்களுக்கு கல்விச்சாலைகளில் போதிக்கப்படும் பொதுவானகல்விமுறைகளாலும், இவ்விதமாகப்பலவாறாக தற்காலங்களில் மனிதர்களை ஒன்றுசேர்க்கும் காரணங்கள் அதிகரித்து வருவதாலும், ஒவ்வொரு தேசத்திலும் பிராசீன முறைகளை அப்பியசிப்பது சுலபமன்று. துவேஷத்தின்பேரில் யுத்தம் ஏற்பட்டு அந்த யுத்தம் முடியுமவரை துவேஷத்தையே ஆதாரமாகக் கொண்டிருப்பினும்,யுத்தம் முடிந்தபிறகு அதுவே ஐக்கியபாவம் அதிகரிப்பதற்கு பலமான காரணமாகின்றது. யுத்தத்தில் முன் பிரிந்துநின்ற பலஜாதியார்கள் ஒன்றுசேருகிறார்கள். அவர்களுள் ஏற்படும் துவேஷம் அவரவர்களது சொந்த விஷயங்களைப்பற்றாது பொது ராஜவிஷயங்களைப் பற்றியதால் நீடித்துநிற்கமாட்டாது. ஆகையால் விபரீதமாய்த் தோன்றினும் இப்போது நிகழும் யுத்தமானது இனிமேல் உலகத்தில்யுத்தம் நிகழாவண்ணம் செய்யக் கூடுமென்றும், உலகத்து ஜனங்களுள் ஐக்கிய பாவத்தை உண்டுபண்ணத் தக்கதென்றும் ஐரோப்பா கண்டத்திலுள்ள தேசங்கள் ஒன்று சேர்ந்து ஐக்கிய மாகாணங்களாக (United States of Europe)

கூடுமென்றும் ஆழ்ந்த ஆராய்ச்சி யுள்ளவர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

***

ஐரோப்பா கண்டத்தில் யுத்தம் நின்றபின்னர் அநேகமாயிரம் மனிதர்கள் யுத்தத்தில் மரித்துப்போவதினால் யுவதிகளாயுள்ள ஸ்திரீகள் யுவாக்களைக்காட்டிலும் அதிகரித்து இருப்பார்களென்றும் கல்யாணம் செய்து கொள்வதற்கு இடமின்றி அநேகம்பெண்கள் இருப்பார்களென்றும் இவ்விதமான நிலைமை இப்போதிய நிலைமையைக் காட்டிலும் வேறாயுள்ளதென்றும் அந்நிலைமைக்குத்தக்கவாறு பரிகாரங்கள் தேடவேண்டி வருமென்றும் சிலர் ஊகிக்கிறார்கள். இப்பொழுதே பிரான்சு, பெல்ஜியம், இங்கிலாந்து முதலிய தேசங்களில் யுத்த நிலைமையால் உண்டு பண்ணப்பட்ட விசேஷ காரணங்களால் விவாக ஸம்ஸ்காரத்திற்கு புறம்பாய் அநேக குழந்தைகள் ஜனித்துக்கொண்டு வருகிறார்களென்றும் அவர்களுக்கு எவ்விதமான அந்தஸ்து சட்டப்பிரகாரம் கொடுக்கத் தக்கதென்றும் பொது விஷயங்களைக் கருதும் பத்திராதிபர்கள் முதலானோர் பரியாலோசனைபண்ணுகிறார்கள். டென்மார்க்கு தேசத்தில் இப்போதே ஸ்திரீகளும் புமான்களும் ராஜ்யத்தில் உத்தியோகங்கள், வோட்டுக் கொடுக்கும் ஸ்வதந்திரங்கள் முதலியவைகளில் சமானர்களென்று நூதனமாகச்சட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ருஷியா தேசத்தில் சாதாரண ஜனங்கள் பானம் செய்து கொண்டுவந்தசாராயத்தைப்பானம் செய்யக்கூடாதென்று இராஜாங்கத்தார் தடுத்துவிட்டார்கள். இங்கிலாந்து தேசத்தில் யுத்தத்தினால் உண்டான நிலைமைகளால் முன் ஆங்கிலேய இராஜாங்கத்தாரால் கைக்கொள்ளப்பட்ட ராஜமுறைகளுக்கு மாறுதலாய் ஜனங்களின் ஜீவனத்திற்கு அவசியமான சாமான்களின் விலைகளை இராஜாங்

கத்தார்கள் அதிகரிக்காமல் ஒழுங்கு படுத்தலா மென்றும் ராஜ்யநன்மையின்பொருட்டு தொழிலாளிகள் ஸ்வகார்யத்திற்காக வேலைசெய்யும் நேரத்தை, ராஜ்ய நன்மைக்காக ராஜாங்கத்தார் நிர்ணயப்படுத்தலாமென்றும் ஒப்புக்கொண்டு வருகிறார்கள்.

***

ஆகையால் பலவிதங்களாய் இக்காலத்தில் இதற்கு முன் தோன்றினதைக் காட்டிலும் விசேஷ மாறுதல்கள் தோன்றுகின்றன அவைகள் யுத்தத்தினால் அதிகரிக்கப் பட்டும் அவசியமாகச்செய்யப்பட்டும் வருகின்றன. இவைகள் எல்லாம் ஜகத்குரு வரும்சமயத்தை சூசிப்பிக்கின்றன வென்றே விவேகத்தால் கைக்கொள்ளத் தகும். இவைகளின் வெளித்தோற்றம் சிலவகையில் விபரீதமாகத் தோன்றினும் உலகை ஈசுவரனது பிரதிநிதிகளாய் ஆளும் ரிஷிகளும் தேவர்களும் பூர்ண ஞானத்துடனும் பக்தியுடனும் அன்புடனும் ஈசுவர ஸங்கற்பத்தை நிறைவேற்றுவதால் எல்லாம் நலத்தையே நாடுகின்றனவென்பது திண்ணம்.

அ. ரங்கஸ்வாமி ஐயர்.

---

## நன்மொழி.

---

யதா யதா ஹி தர்மஸ்ய க்லாநிர்பவதி பாரத ।
அப்யுத்தாநமதர்மஸ்ய ததாத்மாநம் ஸ்ருஜாம்யஹம் ॥

தர்மம் குன்றி அதர்மம் மேலிடும்போதெல்லாம், நான் அவதரிக்கிறேன்.—பகவத்கீதை.

55

## ஹிந்துக்களின் தத்வசாஸ்த்ரம்.

---

1. தத்வசாஸ்த்ர மென்பது வஸ்துக்களின் தத்வம் அல்லது உண்மையை யறிவிக்கு சாஸ்த்ரமேயாம். ப்ரத்யக்ஷமாயுள்ள உலகம், மனிதன், ஜீவன், முதலான வஸ்துக்களின் அமைப்பையும், நிலைமைகளையும் கூறுவது பௌதிக சாஸ்த்ர (Physical Sciences) ங்களாகும். அவைகளின் மூல காரணங்களையும், முடிவையும் பற்றி அநுமான பூர்வமாய் ஆராய்ந்து ஸித்தாந்தம் செய்வது தத்வசாஸ்த்ரங்களின் முறையாகும்.

2. தத்வ சாஸ்த்ரப் பயிற்சியானது, ஒவ்வொரு தேசத்திலும், அததன் கல்வியபிவிருத்தி, செல்வ அபிவிருத்தி, ராஜாங்க முறை, நாகரிகம், முதலான நிலைமைகளுக்குத் தக்கவாறு ஒவ்வொரு நிலைமையில் உண்டாகும்.

நமது தேசத்தில் வேதகாலங்களில், கர்ம மார்க்கமே ப்ரதானமாயிருந்ததாய்த் தெரியவருகின்றது. வேதஸம்ஹிதைகளால் இதனை அறிகின்றோம்.

4. ஸம்ஹிதா காலத்துக்குப் பிறகு இரண்டு மதங்கள் (Schools) தோன்றின. அவைகளாவன:—

(1) கர்ம மார்க்கம்

(2) ஞானமார்க்கம்

கர்மமார்க்கம், (Hindu Ritualism) வேத மந்த்ரங்களுக்குப் பரம்பரையாய் உபதேசிக்கப்பட்டு வந்த கருத்துக்களையே அங்கீகரித்தும், அவ்விதிகளைப் பூர்வாநுஷ்டான முறை தவறாது அநுசரித்தும், யக்ஞ, யாகாதி க்ரியைகளைத்தவறாது அநுஷ்டித்தும் நடையுடை பாவனைகளிலும் பூர்விகர்களைப் போலவே ஆசரித்தும் வருவது கர்ம மார்க்

கிகளின் கொள்கை. இவ்விதிகளெல்லாம், வேத மந்த்ரங்களை ப்ரயோகிக்கும் முறைகளை யறிவிக்கும் ப்ராஹ்மணங்களிலடங்கி யிருக்கின்றன. ஆதலால் ப்ராஹ்மணங்கள் ப்ரயோக சாஸ்த்ரங்கள் (Codes of Procedure) ஆகவிளங்குகின்றன. கர்ம மார்க்கத்தைப் பற்றிய இப்பிராஹ்மணங்களே பிற்காலத்தில் பூர்வ மீமாம்ஸைகளுக்கும், பிறகு கிருஹ்ய, தர்ம ஸூத்ரங்களுக்கும் மூலக்ரந்தங்களாய் இருக்கின்றன. கர்ம மார்க்கிகள், பூமி, ஸ்வர்க்கம், என்னும் ஐஹிக பலன்களை மாத்திரம் அபேக்ஷித்தவர்கள். ஞான மார்க்கிகளால் நித்யம் என்று சொல்லப்படும் ஆமுஷ்மிகத்தையவர்கள் இச்சித்தவர்களல்லர்.

"ஜ்யோதிஷ்டோமேன ஸ்வர்க்காமோ யஜேத"

"ஸ்வர்க்காபிலாஷையுள்ளவன் ஜ்யோதிஷ்டோமம் செய்யவேண்டும்."

"க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி"

"புண்யம் குறைந்ததும் பூலோகம் வந்து சேருகின்றான்."

### ஞானமார்க்கம் (Hindu Rationalism)

ஹிந்துக்களின் ஞானமார்க்கத்தைத் தற்கால யுக்திவாதி (Free thinkers) களின் கொள்கைக்கு ஒப்பிடலாம். ஆனால் ஒரு வித்யாஸம். தற்கால யுக்திவாதிகள், சப்தப்ரமாண (tradition) த்துக்கு அதிக மதிப்பு வைக்கமாட்டார்கள். அதாவது முன்னோர்களின் கொள்கைகள் தங்கள் யுக்திக்கு ஒத்து வராவிட்டால், அவைகளை ஆக்ஷேபித்து விடுவார்கள். ஆனால் பூர்வ ஹிந்து ஞானமார்க்கிகளோ, வேதங்களிலும், அவைகளின் உண்மையிலும் நம்பிக்கையுள்ளவர்கள். தங்கள் அபிப்ராயம் சரியென்று தோன்றும் பொழுது ஸ்மிருதிகளிலும் அவ்வபிப்ராய மடங்கியிருப்ப

தாகவே அவர்கள் எண்ணுவார்கள். அவர்கள் ப்ரத்யக்ஷம், அனுமான-உபமானம், சாப்தம் என மூவ்வகை ஆதாரங்களையும் அங்கீகரித்தார்கள். ஆதியில் இம்மூவ்வகை ஆதாரங்களும் சமமாகவே பாராட்டப்பட்டு வந்தன. ப்ரத்யக்ஷ அநுமானுதிப்ரமாணங்களால் வரும் முடிவுகள், சப்தம் அல்லது வேதப்ரமாணங்களால் நிரூபிக்க முடியாவிடினும் தங்களது முடிவு சரியென்ற எண்ணத்தால் வேத மந்திரங்களையும் அவ்வவபிப்ராயத்தைக் கொடுக்கும்படி புதிதாய் அர்த்தப்படுத்தி வருவது வழக்கமாயிற்று.

இவ்வாறு பூர்வ ஞானமார்க்கிகள், வேதங்கள் அல்லது சப்தப்ரமாணங்களுக்கும் விசேஷ மதிப்பு வைத்திருந்த போதிலும், தங்கள் யுக்தியை யனுசரித்து அதன் ப்ரகாரம் முடிவுக்கு வராதிருக்கவில்லை.

கர்மமார்க்கிகளைப் போலல்லாமல் ஞான மார்க்கிகள் ப்ரபஞ்சம், மனிதன் இவைகளின் ஸ்ருஷ்டி, ஸ்திதி, முடிவு முதலானவைகளைப் பற்றியும், ப்ரபஞ்சத்துக்கும், மனிதனுக்குமுள்ள ஸம்பந்தங்களையும் இன்னும் இவை போன்ற எண்ணிறந்த அதிபௌதிக (Metaphysical) விஷயங்களைப் பற்றியும் அவர்கள் ஆலோசிக்க ஆரம்பித்தனர். ஒவ்வொரு காலத்திலும் அவர்கள் பல ஸித்தாந்தங்கள் செய்திருக்கின்றனர். பரிஷத் என்ற பூர்வ கல்விச் சங்கங்களில் தங்கள் அபிப்ராயங்களை நிர்ப்பயமாய் ஆக்ஷேப ஸமாதானங்களுடன் தெரிவித்திருக்கின்றனர். இப்படிப்பட்ட ஞானமார்க்க வியவஹாரங்களெல்லாம் ஆதிகாலத்தில் உத்தர மீமாம்ஸையிலும், பிற்பட்டு ஆரண்யகத்திலும் கடைசியாய் உபநிஷத்துக்களிலும் நன்றாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

## அதியுக்திவாதம் (Extreme Rationalism)

காலம் செல்லச் செல்ல, நமது தேசத்தில், யுக்திவாதமானது விசேஷமாய்ப் பலப்படத் துவங்கிற்று. அதியுக்திவாதிகளாய் ஓர் வகுப்பினர் உண்டானார்கள். வேதம் முதலான சாப்தப்ரமாணங்களில் இவர்களுக்கு நம்பிக்கையேயில்லை. மற்ற இருவகை ப்ரமாணங்களை மாத்திரம் அவர்கள் உண்மை யெனக் கைக்கொண்டார்கள். இவர்களுக்குத் தான் நாஸ்திகர்கள் என்று பெயர். இங்கு நாஸ்திகர் என்றால், வேதங்களில் நம்பிக்கை யில்லாதவர்கள் என்றர்த்தமே யொழிய தெய்வத்தில் நம்பிக்கை யில்லாதவர்கள் என்றர்த்தமல்ல. இவர்கள் அபிப்ராயங்கள் பிற்பட்டுண்டான சார்வாக (Sensualists and materialists) நூல்களிலும், பௌத்தர் (Hindu Nihilists) களின் சூன்யவாத நூல்களிலும் விவரமாய்க் காணலாம். ஸாங்க்ய மதத்தின் பிற்பட்ட க்ரந்தங்களிலும் ஈசுவரன் அவ்வளவாக ஒப்புக்கொள்ளப்படவில்லை. பரமாத்மா உண்டென்றும் அப்பரமாத்மாவை யடைந்து அத்துடன் ஸாயுஜ்யமடைவதே மனிதனுடைய பரமார்த்தம்(Supreme goal)என்றும் யோகசாஸ்த்ரம் போதிக்கின்றது. ஆனால் ஸாங்க்ய மதமோ, பரமாத்மா உண்டென்பதை நிரூபிக்க முயலாமல், ஜீவாத்மாவையும், 24 தத்துவங்களடங்கிய ப்ரக்ருதியையும் மாத்திரம் அங்கீகரிப்பதுடன், ஜடப்பொருளான ப்ரக்ருதியினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளுவதே மனிதனுடைய உயர்ந்த புருஷார்த்தம் என்றும் கூறுகின்றது. இது தான் புருஷார்த்தங்களில் நாலாவதாகிய மோக்ஷம் எனப்படும்.

ஆதலால், பூர்வ கர்ம மார்க்கம், யோகமார்க்கம், வேதாந்தமார்க்கம் முதலான ஆஸ்திக மதங்களுக்கும், பிற்பட்ட, சார்வாகம், பௌத்தம் முதலான நாஸ்திக மதங்களுக்கும்

நடுநிலைமையா யிருப்பதே ஸாங்க்யமதமாகும். ஆஸ்திக மதங்களைப்போல வேதங்களில் ஸாங்க்ய மதக்காரருக்கும் நம்பிக்கையுண்டு. ஆனால், பரமாத்மா உண்டென்று நிரூபிக்கவுமில்லை.

இக்காரணங்களால் ஸாங்க்ய மதமானது தற்காலத்திய அக்ஞேய (Agnosticism) மதத்துக்குச் சமமென்று சொல்லலாம்.

ஆதலால், முன்னொருகாலத்தில் ஹிந்து தத்வசாஸ்த்ரங்களில், மூன்று முக்யமான பிரிவுகளிருந்தனவென்று சொல்லலாம் அவையாவன:—

(1) கர்மமார்க்கம் (Ritualism) மூவ்வகை ப்ரமாணங்களிலும் வேதப்ரமாணமே முக்யமானதென்றும் வைதிக மார்க்கத்தில் மிகச்சிரத்தை யுள்ளவர்களுமான ப்ராமண, க்ஷத்ரியர் முதலானவர்களால் அனுஸரிக்கப்பட்டது.

(2) ஞானமார்க்கம் மிதவாதம் (Moderate Rationalism) இம்மார்க்கத்தை யனுஸரித்தவர்கள், வேதப்ரமாணமுள்பட மூவ்வகை ப்ரமாணங்களிலும் நம்பிக்கையுள்ளவர்கள்.

ஸேசுவரவாதிகள் இவ்வகுப்பினர் முறையே இருபிரிவினராயுள்ளவர்கள். உலக ஸ்ருஷ்டி கர்த்தாவாகவும், ஆதியந்த மற்றவராகவும் கடவுள் ஒருவர் உண்டென்றும், அது வேதப்ரமாணங்களாலும் உபநிஷத்துக்களாலும் நிரூபிக்கப்பெற்றுள்ளதென்றும், யுக்தி வாதத்துக்கும் பொருந்தியிருக்கின்றதென்றும் சொல்லுபவர்கள் ஓர் பிரிவினர். இவர்கள் ஸேசுவரவாதிகள்

அக்ஞேயவாதிகள் (Agnosts) இவர்கள் ஈசுவரன் அல்லது பரமாத்மா உண்டென்றாவது இல்லையென்றாவது நி

ரூபிக்க முயலவில்லை. ஈசுவரன் உண்டென்பது நிரூபிக்க முடியாதென்றும், அதை அறியச்செய்யும் முயற்சி வீணென்றும் இவர்கள் கூறுவார்கள். ஸாங்கியமதம் முற்றின பருவத்தில் இக்கொள்கை விசேஷமாய் கைக்கொள்ளப் பட்டது. இச்சந்தேகக் கோள்கையானது பிற்பட்ட நிரீசுவரவாதிகள் ஈசுவரனே இல்லையென்று வாதிக்க இலகுவான ஓர் வழியாய் விட்டது.

(3) ஞானமார்க்கம் அதியுக்தி வாதம் (Extreme Rationalism) இவர்கள் வேதப்ரமாணங்களை நம்பவேயில்லை. ப்ரத்யக்ஷ, அனுமானாதி இருவகை ப்ரமாணங்களே முக்யமானவைகள் என்பது இவர்கள்கொள்கை. சார்வாகர்கள் லோகாயதிகர்கள், பௌத்தர்கள் முதலானவர்கள் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

(இன்னும் வரும்.)

R. S. நாராயணஸ்வாமி ஐயர் B.A., B.L.,

---

# தமிழ்ப் புத்தகங்களின் விளம்பரம்.

| | | ரூ. அ. ப |
|---|---|---|
| 1. | வேதாந்த சூளாமணி | 1—4—0 |
| 2. | பதஞ்சலியோக சூத்திரம் | 1—0—0 |
| 3. | இயேசுகிறீஸ்துஎன்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல் | 1—0—0 |
| 4. | மாதுஸ்ரீ அந்நிபெஸண்ட் அம்மையாரின் யோக உபந்யாஸங்கள் | 0-12—0 |
| 5. | மனிதன் வமிசாவளியின் உண்மை | 0—8—0 |
| 6. | பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும் | 0—6—0 |
| 7. | ஔவையோகக்குறள்(தமிழினின்றுஆங்கிலமொழிபெயர்ப்பு) | 0—4—0 |
| 8. | ஸர்வசமய ஐகமத்ய ஸாரஸங்கிரகம் | 0—4—0 |
| 9. | இந்துமத தூஷணையின் பரிகாரம் | 0—4—0 |
| 10. | மௌனவாக்கு | 0—2—0 |
| 11. | ஸந்மார்க்க தீபம் | 0—2—0 |
| 12. | மாதுஸ்ரீ அந்நிபெஸ்ண்ட் அம்மையார்சரித்திரம்(படத்துடன்) | 0—1—0 |
| 13. | மஹாலய பக்ஷமும் நவராத்திரியும் | 0—1—0 |
| 14. | எண்ணங்களின் இரஹஸியம் படத்துடன் | 0—1—0 |
| 15. | காயத்ரீ | 0—1—0 |
| 16. | காயத்ரீராமாயணம் (ஸமஸ்கிருதமூலமும் தமிழ்மொழி பெயர்ப்பும்) | 0—1—0 |
| 17. | மாதுஸ்ரீ ஹெலினாம்பாள் அம்மையார் சரித்திரம் | 0—0—6 |
| 18. | ஹிந்து என்பவன் எவன்? | 0—0—6 |
| 19. | உலோககுருவின் அவதாரங்கள் | 0—0—6 |
| 20. | பகவான் கௌதம புத்தரின் சரித்திரம் | 0—0—6 |
| 21. | வெள்ளியம்பலம் என்ற ஞானிகளின் சங்கம் | 0—1—0 |
| 22. | மோனம் என்பது ஞானவரம்பு | 0—0—9 |
| 23. | உதாஸீந ஸாது ஸ்தோத்ரம் (ஸமஸ்கிருத மூலமும் தமிழ் மொழி பெயர்ப்பும் | 0—6—0 |
| 24. | மஹாத்மாக்களும் அவர்களையடையும் மார்க்கமும் | 0—0—6 |
| 25. | தேவாலயம் | 0—0—3 |
| 26. | பிரஹ்மக்ஞானமும் பிரஹ்மக்ஞான சபையும் | 0—0—6 |
| 27. | ஸந்மார்க்கமுறையில் ஹிதோபதேசம் | 0—1—0 |

மேற்கண்ட புத்தகங்கள் தேவையானவர்கள் "மதுரை பிரஹ்மக்ஞான ஸபை பிரஸிடெண்டு அவர்களுக்கு" அல்லது "மானேஜர் தியாஸாபிகல் பப்ளிஷிங்ஹவுஸ், அடையாறு, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். 100 புத்தகங்களுக்கு 20 கமிஷன் கொடுக்கப்படும்.

பல கண்காட்சிகளில்
மேடல்கள் பெற்ற அபூர்வ ஔஷதங்கள்.

# பி. சுப்பராய், ஆயுர்வேத ஔஷதசாலை.

ஸ்ரீ வெங்கடேச பெருமாள் கோவில் சன்னிதி, தஞ்சாவூர்.

தயவு செய்து
இதைத் தங்கள் சிநேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

## பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

லக்ஷ்மீகர கஸ்தூரி மாத்திரைகள்:-தாம்பூலம் தரிப்பவர்கள் கைடப்பில் எப்பொழுதும் வைத்துக்கொள்ள வேண்டிய விலையுயர்ந்த வஸ்து ; ந்த ரோய், வாய்நாற்றம், அஜீரணம், பித்தவாய்வு, இவைகளை நீக்கும். தாம்பூலத்துடனாவது, தனியாகவாவது, சாப்பிட்டபின் 2 மாத்திரை உபயோகித்தால், எப்பேர்க்கொத்த கனத்த சாப்பாட்டையும் உடனே ஜீரணம் செய்வதுடன், வாயில் அநேக மணிநேரம் சுகந்த வாசனையிருக்கும். பிரதிதினம் காலையில் இரண்டு மாத்திரைகள் சாப்பிட்டால் நீடித்த அக்கினிமந்தம் மலச்சிக்கல், அஜீரணத்தினுலுண்டாகும் வயிற்றிழிவ, வயிற்றுநோய், நெஞ்செரிச்சல் முதலிய பற்பல வியாதிகள்தீரும். பிரசவகாலத்தில் தாம்பூலத்துடன் உபயோகித்துவந்தால் ஜன்னி கிட்டாது; ஜன்னியில் கொடுக்க ஜன்னி தீரும் இதில வாகிரிமுதலான யாதொரு அபாயகரமான வஸ்துசேரவில்லை. காஷ்மீர் தேசத்திலிருந்து நேராகவரவழைத்த கஸ்தூரி, தக்கரேக், பச்சை கற்பூரம் முதலிய அனேக விலைபெற்ற மருந்து சாமான்களும், வாசனை திரவியங்களும் சேர்த்து செய்யப்பட்டிருக்கிறது. தாம்பூலத்துடன் உபயோகித்தால் பச்சைக்கற்பூரம் முதலாகிய வாசனைவஸ்துக்கள் உபயோகிக்க வேண்டியது அனுவசியம், அரை குழந்தைமுதல் வயதுசென்றவர்களுக்கு சளி, இருமல், காசம், காலரு, பிளேக், சுரம் முதலானவைகளுக்கு வயதுக்கும் தேகத்துக்கும் தகுந்தபடி 1முதல் 4மாத்திரைகள் வரையில் வெற்றிலைச்சாற்றில் கொடுக்க சுகமாகும். சீசா 1-க்கு விலை அணு 4, இந்தியாவில் 1-முதல் 12 சீசாக்கள் வரையில் அனுப்ப பாக்கிங்கு தபால்சார்சு அணு 5-ம், சிலோனுக்கு அணு 7-ம் பிரத்தியேகம்.

---

என்னுடைய அவுஷதசாலையின் ஹெட் ஆபீசை பாங்கிப் பேட்டையிலிருந்து தஞ்சாவூருக்கு ஸ்திரமாக மாற்றியாய் விட்டபடியால், இனிஎல்லா ஆர்டர்களும், இப்பக்கத்தின் தலையில் அச்சிட்டிருக்கும் எனது ஹெட் ஆபீசாகிய தஞ்சாவூர் விலாசத்திற்கே எழுதக்கோருகிறேன். பாஙகிப்பேட்டைக்கு எழுதவேண்டாம்.